# “தர்மம் சர„

## “धर्म चर„

ஜூலை (15.07.2025) , பிரதி-11 -கும்பகோணம்

>>>ப்ரஹ்மஸ்ரீ குருராம கனபாடிகள் பேசுகிறார்

# ஸம்ஸ்காரம் என்பதன் பொருள்!



கர்மா என்றால் என்ன? கர்மா என்பது காரியம். ஒரு வேஷ்டியை உண்டாக்குவதற்கு எவ்வளவு காரியங்கள் செய்ய வேண்டியிருக்கின்றன! பஞ்செடுத்து, கொட்டை பிரித்து, நூல் நூற்று, தறியில் நெய்து, சாயம் தோய்த்து – என்றிப்படி எத்தனை செய்ய வேண்டியிருக்கிறது? அதைப் போல அநேக காரியங்கள் பண்ணி ஒருவனை ஆத்மவித்தாக்க வேண்டும். குணத்தினாலும் சரீரத்தினாலும் சேர்ந்து, ஒன்றையொன்று பரிசுத்தி பண்ணிக் கொள்ளும் முறையில் கர்மா செய்யவேண்டும்.

இப்படிப்பட்ட கர்மாவுக்கே ஸம்ஸ்காரம் என்று பெயர். ஒரு பதார்த்தத்துக்கு உள்ள தோஷத்தைப் போக்குவது எதுவோ, குணத்தை புகட்டுவது எதுவோ அதுதான் ஸம்ஸ்காரம்.பஞ்சு நூலாகி வேஷ்டியாக வேண்டுமென்றால் பல காரியங்கள் செய்ய வேண்டியிருக்கிறது. பஞ்சு யந்திர சாலையில் எவ்வளவு காரியங்கள் செய்யப்படுகின்றன? நூல் சிக்கலாகாமல் நெய்ய எத்தனை ஜாக்கிரதையுடன் எவ்வளவு செய்ய வேண்டியிருக்கிறது? நம்முடைய ஆத்மாவானது இந்திரிய சலனங்களால் சிக்கலாக இருக்கிறது. சிக்கலை எடுத்து எப்பொழுதும் ஆனந்தமாக இருக்கச் செய்யவேண்டும். அப்படிச் செய்வதற்கு பல தடைகள் இருக்கின்றன. ஏதோ சில ஸமயங்களில் மட்டும் இப்போது ஆனந்தம் உண்டாகிறது. பல விதமான துக்கம், வலி இருந்தும் இவ்வளவையும் மீறிக் கொண்டு கொஞ்சம் ஆனந்தம் உண்டாகிறதே, இந்த ஆனந்தம் எப்பொழுதும் இருக்குமாறு பண்ணவேண்டும். அதற்காக ஜீவனை ப்ரம்ம லோகத்தில் கொண்டு போய் சேர்க்கவேண்டும். அந்த ஈச்வர ஸந்நிதானத்தில் சேர்த்துவிட்டால் அப்புறம் துன்பமே இராது. பிரளயத்துக்கு அப்புறம் ஐக்கியம் உண்டாகும். ஆகையால் அங்கே சேர்க்கத் தயார் பண்ண வேண்டும்.

இதற்குத்தான் நாற்பது ஸம்ஸ்காரங்களையும் எட்டு ஆத்ம குணங்களையும் ரிஷிகள் சொல்லியிருக்கிறார்கள்.நமக்கு லட்சியமாக உள்ள புராண புருஷர்களின் உத்தம குணங்களை நேரே அப்படியே எடுத்துக் கொண்டு அநுஸரிக்கலாம் என்றால், அதற்கு முடியாமல் ஆசாபாசங்கள், துவேஷங்கள், பயம், மனதின் மற்ற துர்குணங்கள் எல்லாம் இடைஞ்சல் செய்கின்றன. நமக்கு நிறைய கர்மாக்களைக் கொடுத்து, அதோடு, ‘இப்படித்தான் உட்கார வேண்டும். இப்படித்தான் டிரெஸ் பண்ணிக் கொள்ள வேண்டும்’ என்றெல்லாம் ஒரு கட்டுப்பாட்டுக்கு அடங்கும்படி பண்ணினால்தான் மனதானது முரட்டுத்தனமாகக் கண்டபடி போகாமல் இருக்கிறது. முரட்டுத்தனம் , அஹங்காரம் குறைய குறையத்தான் ஆசை, துவேஷம் பயம், துக்கம் முதலானவைகளை அடக்கிக் கொண்டு உத்தம குணங்களிலிருந்து நழுவாமல் இருக்க முடிகிறது. ஸம்ஸ்காரங்களும் ஸத்குணங்களும் ஒன்றோடொன்று சேர்த்து வருகின்றன.

ஐடியலாக இருக்கிற புராண புருஷர்களின் குணங்களை – கதையாகக் கேட்டு, நாமும் அப்படி இருக்கவேண்டும் என்று ஆசைப்பட்ட குணங்களை – நாம் யதார்த்தத்தில் பெறுவதற்கு ஸம்ஸ்காரங்கள் ஸஹாயம் செய்கின்றன.

இன்னும் அறிவோம்

# "அம்பிகை"

**ஸ்ரீமதி ஸௌம்யா குருராமன்**



அம்பிகையை ஆராதித்து எவ்வளவோ மஹாபுருஷர்கள் அனுக்கிரகத்தை அடைந்திருக்கிறார்கள். மஹாகவி காளிதாஸர் அம்பிகையின் தாஸர். அம்பிகையினுடைய கிருபையால் அவருக்குப் பரிபூர்ண வாக்கு உண்டாயிற்று.



காஞ்சீபுரத்தில் காமாக்ஷி ஸந்நிதியில் ஊமையொருவர் அம்பிகையை உபாஸனை செய்து மஹாகவியானார். மூககவி என்னும் பெயரைப் பெற்றார். அவர் அம்பிகையின் விஷயமாக 500 ச்லோகங்கள் செய்திருக்கிறார். அத்தொகுதிக்கு "மூக பஞ்சசதி" என்று பெயர். அவை மிகவும் ரசமுள்ளதாகவும் இருக்கும்.அம்பிகையின் கடாக்ஷம் எப்படிப்பட்டவனையும் கைதூக்கி விடும் என்பது சாஸ்திரங்களின் கருத்து. அவளை பரதேவதை என்று வேதம் சொல்லுகிறது.குழந்தைகள் பசி, கஷ்டம் முதலியவை வரும் காலத்தில் தாயாரை ஸ்மரிக்கின்றன. குழந்தைகளைவிடக் கன்றுக்குட்டிக்கு 'அம்மா!' என்று கத்துவதில் ஆவல் அதிகம். கன்றுக்குட்டி 'அம்மா' என்று கத்துவதைப் பார்த்துதான் மனிதர்கள் 'அம்மா' என்ற பெயரைத் தாயாருக்கு வைத்திருக்க வேண்டும்.இவ்விதம் பரம ஆவலோடு தாயாரைக் காணவேண்டுமென்று கன்றின் மனமுருகுவரு போலவே லோகமாதாவினுடைய அனுக்கிரகத்தை எப்பொழுது பெறுவோம் என்று நாமும் மனமுருக வேண்டும்.நாம் வேறு, அவள் வேறு என்ற பேதமின்றி ஒன்றாகவே த்யானம் செய்யவேண்டும். இன்னும் அறிவோம்.



"அடிப்படை தர்மங்கள்"

**வித்வான் விரூபாக்ஷ சர்மா**

## पवित्रमहिमा

यथापुष्करपर्णे अपांलेपो न विद्यतेष्करपर्णे

अपांलेपोनविद्यते एवं पवित्रहस्तस्य पापलेपोनविद्यते

**பவித்திரத்தின் மகத்துவம்**

தாமரை இலை எப்படி தண்ணீரிலேயே இருந்த பொழுதிலும் தண்ணீருடன் சேராமல் இருக்கின்றதோ, அதைப்போல் பவித்திரத்தை அணிந்தவர் பாவத்துடன் சேராமல் இருக்கின்றார் என்று கௌஷிக ரிஷி சொல்கிறார்.



## ஸந்தேகங்களும் ஸமாதானங்களும்

## க்ருஹஸ்தனுக்கு இரண்டு கடி ஸூத்ரங்கள் வேண்டுமா?

ஸமாதானம்:- சாஸ்த்ரப்ரகாரம் ஒன்றுதான். ஆனால் வேஷ்டி உடுத்திக்கொள்ளும் கச்சங்களில் அது ஸம்பந்தப் படக்கூடாது. அது தனியாகத்தான் இருக்கவேண்டும்.

## கணித சாஸ்திரமும் அத்வைத தத்வமும்

வேங்கடேஷ்- பூர்வமீமாம்ஸா சிரோமணி




பிரளய காலத்தில் பரமாத்மாவினிடத்தில் எவ்வளவு அண்டபிண்ட சராசரங்கள் வந்து ஒன்று சேரினும் அதனால் பரமாத்மா பெருப்பதில்லை; திரும்பவும் சிருஷ்டி காலத்தில் பரப்பிரும்மத்தினிடமிருந்து எவ்வளவு சராசரக் கூட்டங்கள் வெளிவரினும் பரமாத்மா சிறுப்பதில்லை.


அதுபோல பூஜ்யத்தினால் வகுக்கப்பட்ட எந்த எண்ணிக்கையினுடைய ஈவானது (INFINITY) எவ்வளவு எண்ணிக்கை கூடினும் அது பெருப்பதில்லை என்றும், அதிலிருந்து எவ்வளவு கழித்தாலும் அது குறைவதில்லை என்றும் கணக்கு மூலமாய் நிரூபித்திருக்கிறார்கள்.

ஸ்ரீ ஆதி சங்கராசார்ய-ஸ்வாமிகள் சாந்தோக்ய உபநிடதபாஷ்யத்தில் அத்வைதப் பிரும்மத்தைக் கூறுமிடத்து, "சிருஷ்டிக்கு முன்னும் அது அத்வைத ப்ரும்மமே, சிருஷ்டிக்குப் பிறகும் அது அத்வைதப் பிரும்மமே" என்கிறார்.

இன்னும் அறிவோம்.

"இந்தத் தலைமுறையைச் சேர்ந்த நாம், தலைமுறை தலைமுறையாகப் பின்பற்றப்பட்டு வரும் வேதப் படிப்புச் சங்கிலியில் ஒரு முறிவை ஏற்படுத்தாமல்  நமது சந்ததியினர் வேதங்களைக் கற்கும் வாய்ப்பை ஏற்படுத்தித்தருவோம் .




**லோகக்ஷேமத்திற்காக நமது பாடசாலை வித்யார்த்திகள் அனுஷ்டித்து வரும் சஹஸ்ர காயத்ரி ஜபம்**





**வேதத்திலே மிகவும் கடினமான பரீக்ஷையான “ஷலாகா” என்ற “கல்வைத்த வார” பரீக்ஷையில் நமது வித்யார்த்திகள் வெற்றி பெற்றுள்ளனர்**

